தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1970 ஆகஸ்ட் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1967-லிருந்து மத்திய அரசின் சட்ட அமைச்சராக இருந்த திரு. பா. கோவிந்த மேனன் அவர்கள் 23—5—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்;

1952-லிருந்து 1956-ம் ஆண்டு வரை ஒட்டப்பாளம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. நாராயண குருப் அவர்கள் 19—5—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் ;

1936-லிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், 1946-லிருந்து 1952-ம் ஆண்டு வரையிலும், பந்தர் பொரு கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், 1946-லிருந்து 1949-ம் ஆண்டு வரை அமைச்சராக இருந்தவருமான திரு. வி. கூர்மையா அவர்கள் 5—6—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் ;

1950-லிருந்து 1952-ம் ஆண்டு வரை மலப்புரம் முஸ்லீம் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். சி. எ. அசன்குட்டி குருக்கள் அவர்கள் 25—6—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் ;

1952-லிருந்து 1956-ம் ஆண்டு வரை கோழிக்கோடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், 1952-லிருந்து 1954-ம் ஆண்டு வரை சட்ட அமைச்சராக இருந்தவருமான திரு. கே. பி. குட்டிகிருஷ்ணன் நாயர் அவர்கள் 5—8—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கும், நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

2. இரங்கல் தீர்மானம்.

உறுப்பினர்கள் திரு. வ. சொ. சு. மணி, திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் ஆகியோர் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மீண்டும் ஓர் அறிவிப்பு. 1967-ம் ஆண்டு ஆத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. வ. சொ. சு. மணி அவர்கள் 2—5—1970-ம் நாளன்றும், 1967-ம் ஆண்டு கோபிச்செட்டிப்பாளையம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்கள் 12—5—1970-ம் நாளன்றும் மறைந்துவிட்ட துயரமான செய்தியைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை, இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் உறுப்பினர் திரு. வ. சொ. சு. மணி அவர்கள் 2—5—1970-ம் நாளன்றும், கோபிச் செட்டிப்பாளையம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் உறுப்பினர் திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்கள் 12—5—1970-ம் நாளன்றும் எதிர்பாராத வகையில் மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அவர்களது மறைவால் வருந்தும் குடும்பத்தினர்க்கு இப் இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. சொ. சு. மணி அவர்களையும் சுதந்திராக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். இராமசாமிக் **கவுண்டர் அவர்களையும்** இந்தப் பேரவை **இழந்திருப்பது நமக்கெல்லாம்** பெருந்துக்கத்தையும் **துயரத்தையும் அளிக்ின்ற ஒரு** செய்தியாகும்.